# ஒப்பியல் நோக்கில் செவ்விலக்கியங்களும் காளிதாசரின் படைப்புகளும்

**முனைவர் பெ. சுமதி**
உதவி பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை
தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

வடமொழி இலக்கியங்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுபவர் காளிதாசர் காளிதாசரின் காலம் என்பதற்குச் சரியான வரையறை இல்லை என்பதைப் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. அவர் காஷ்மீரத்தில் பிறந்தவர், உஜ்ஜைனியில் வாழ்ந்தவர் என்று கூறுகின்றனர். கர்ண பரம்பரையாக வழங்கும் செய்திகள் அவர் போஜ ராஜனோடு வாழ்ந்தவர் என்று கூறுகின்றது. கி.மு.முதல் நூற்றாண்டு முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையுள்ள ஆறு நூற்றண்டு வரை அறிஞர்களின் கொள்கைக்கிணங்க அவர் வாழ்ந்த காலம் ஊசலாடி வருகின்றது. (வே,ஸ்ரீ.வேங்கடராகவையங்கார்,1982:) என்றும், குமாரசம்பவத்தின் முதல் உரையாசிரியர் சமஸ்கிருத இலக்கிய வரலாறு எழுதிய கீத் “காளிதாசன் கி.பி 472 இதற்கு முன் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் கிட்டத்தட்ட கி.பி. 400 அவர் காலம் எனக் குறிப்பது முற்றும் சரியாகும் என்றும்” (கீத்.80) கருத்தறிவிப்பார். நம்மவர்களுடைய முடிவுகளும் ஊகங்களும் மாறுபட்டவை. அவர்களுடைய கணிப்புகளும் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரை விரிந்து செல்லும்” (சு.நடனசபாபதி.(ப.ஆ)2006.2) என்று கூறப்படுகின்றது.

காளிதாசருடைய படைப்புக்கள், சாகுந்தலம், மேகதூது, குமாரசம்பவம், ருதுசம்காரம், ரகுவம்சம், மாளவியாக்னிமித்திரம், விக்ரம ஊர்வசியம் போன்றனவாகும். இந்தப் படைப்புகளிலிருந்து காளிதாசரின் பன்முகத் தன்மையை அறிந்துகொள்ள முடியும். இத்தகைய படைப்பாற்றலுடைய காளிதாசரின் படைப்புக்களை தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தால் இரு இலக்கியங்களுக்கிடையிலுள்ள தனித் தன்மைகளை வெளிக்கொண்டு வரமுடியும்

## ஆற்றுப்படை, குமாரசம்பவத்தில் அழகு வர்ணனை

சங்க இலக்கியங்கள் என்று சொல்லப்படுகின்ற ஆற்றுப்படை இலக்கியங்களின் தாக்கம் காளிதாசரின் படைப்புகளில் காணப்படுவதாக மேலை நாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். காளிதாசரின் குமாரசம்பவம் பதினேழு சருக்கங்களைக் கொண்டது. சிவன், பார்வதி திருமணம், குமரன் பிறப்பு பற்றி கூறப்படுகின்றது. குமாரசம்பவம் என்ற சொல்லுக்கு “குமாரன்” என்று அழைக்கப்படும் ஸீப்ரஸஹ்மண்யரின் பிறப்பு என்பது பொருள். அதனைப் பற்றிக் கூறுவதால் காவியத்திற்கும் அதுவே பெயராக அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (வே,ஸ்ரீ.வேங்கடராகவையங்கார்,1982)

சிறுபாணாற்றுப்படையில் விறலியின் அழகு வர்ணிக்கப்படும் நிலையில் “மடமான் நோக்கின்”(சிறு.ஆ.31) மடப்பத்தினையுடைய மான் போன்ற பார்வையையுடையவள் விறலி என்று விறலியின் பார்வை மானின் பார்வையைப் போன்று இருந்தது என்று கூறப்படுகின்றது. “பெருங்காற்றுள்ள இடத்தில் நீலத் தாமரை மலர் காற்றில் அசைந்துகொண்டேயிருக்கும். அதுபோல் உள்ளது பார்வதியின் மருண்ட பார்வை, மான்களின் பார்வையும் அத்தைகையதே, எனவே அப்படிப்பட்ட அழகிய பார்வையைப் பார்வதி மான்களிடம் கற்றுக் கொண்டாளோ? அல்லது மான்கள் தாம் அவளிடம் கற்றுக்கொண்டனவோ? என்று நினைக்கும் படி இருந்தது. பார்வதியின் மருண்ட பார்வை மானினுடையது போல் இசைவாக இருந்தது. அவள் கண் நீலோத்பலம் போலும் மான்கண் போன்றும் இருந்தது என்பது கருத்து.”(வே.ஸ்ரீ. வேங்கடராகவாச்சார்யார்.1-46) என்று பார்வதியின் பார்வை மருண்ட மான்களின் பார்வை போன்று இருந்தது என்று கூறப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையில் விறலியின் பார்வை மானின் பார்வைக்கு உவமையாகக் கூறப்படுவது போன்று குமாரசம்பவத்திலும் பார்வதியின் பார்வை மருண்ட மானின் பார்வைக்கு உவமையாகக் கூறப்படுவதிலிருந்து இரண்டு கவிஞர்களும் ஒரே உவமைப் பொருளைப் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து சங்க இலக்கியத் தாக்கம் காளிதாசரின் படைப்புக்களில் வெளிப்படுவதை அறியமுடிகின்றது.

பாலை நிலத்தில் நடந்து செல்லும் விறலியின் பாதங்களில் வெப்பம் மிகுந்த பரல் கற்கள் பட்டு வருத்துகின்றது என்பதை,

**“வருந்துநாய் நாவின் பெருந்தகு சீறடி**
**அரக்கு உருக்கு அன்ன செந்நிலன் ஒதுங்கலின்**
**பரற்பகை உழந்த நோயொடு சிவணி” (பொ.ஆ.42-44)**

என்று கூறப்படுகின்றது. ஓடியிழைத்த நாயினது நாக்குப் போன்ற சிவந்த சிறிய அடிகள், அரக்கை உருக்கி ஊத்தினாற் போன்ற வெப்பம் மிகுந்த பாலை நிலத்தில் நடக்கின்ற பொழுது பழுத்த பரல்கற்கள் வருத்த, பாதங்களில் பழம் போன்ற சிவந்த கொப்புளங்கள் தோன்றின என்று கூறப்படுகின்றது.

**குமாரசம்பவத்தில் கின்னர ஸ்த்ரீகள் நிலை பற்றி கூறும் காளிதாசர்,**

“ஹிமாலயத்திலுள்ள வழிகளில் பனி உறைந்து பாறையாக உள்ளது. கின்னரஸ்த்ரீகள் அவ்வழிகளில் நடக்கும்பொழுது அவ்வுறைப் பனிக்கற்கள் விரல்களையும் குதிகால்களையும் துன்புறுத்துகின்றனதாம். ஆயினும் கின்னர ஸ்த்திரீகள் தங்களது மெதுவாக நடையை மாற்றிக்கொண்டு வேகமாகச் செல்ல முடிவதில்லை. ஸ்தனம், இடை இவற்றின் பாரமே இதற்குக் காரணமாகும். கின்னரர்களில் சிலர் குதிரையின் முகமும் மனித உடலும் உடையவர்கள். சிலர் மனிதமுகமும் குதிரை உடலும் உடையவர்கள். இங்கு கூறப்பட்டவர்கள் முதல் வகையைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிக்க வந்த சொல்.” (கு.ச.1-11) என்று கின்னர ஸ்த்திரீகள் பனிப்பாறைகளில் நடக்கின்றபொழுது அப்பனிப்பாறைகள் அவர்களில் விரல்களையும், பாதங்களையும் வருத்தமுறச் செய்கின்றன என்று காளிதாசர் குறிப்பிடுவது, முடத்தாமக்கண்ணியர் விறலியின் பாதம் பாலை நிலத்தில் நடக்கின்ற பொழுது வருத்தமுற்றது என்று கூறுவதை நினைவுறுத்துகின்றது. முடத்தாமக்கண்ணியாரும் காளிதாசரும் கூறும் நிலம் வேறுவேறாகத் இருந்தாலும் அதனால் ஏற்படும் துன்பம் ஒன்று என்பதைக் கூறும் நிலையில் ஒற்றுமைக் கூறுகள் காணப்படுகின்றன.

**இயற்கையும் மனித நேயமும்**

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் என்பதைச் சங்கப்புலவர்களின் கவிதை வரிகள் உணர்த்துகின்றன. உரிப்பொருளில், இயற்கையை இரண்டறக் கலந்து பாடும் ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்ந்ததற்குக் காரணம் அவர்களின் வாழ்வியல் சூழல் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் இயற்கையைத் தங்களின் உறவுகளின் ஒன்றாகக்கருதிய நிலையைச் சங்கப்பாடல்களில் காணமுடிகின்றது. சான்றாகக் களவு வாழ்க்கையை மட்டுமே விரும்பி பகற்குறியில் வந்து செல்லும் தலைவனை, தோழி வரைவு கடாவும் நிலையில் புன்னை மரத்தைத் தன் உடன் பிறப்பாகக் குறிப்பிடுகின்றாள்.

**“விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ் முளை அகைய**
**நெய் பெய் தீம் பால் செய்து இனிது வளர்த்தது**
**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது நலனே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே**
**விருந்தின் பாணர் விளர் இசை கடுப்ப**
**வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்த்**
**துறை கெழு கொண்க! - நீ நல்கின்**
**இறைபடு நீழல் பிறவுமார் உளவே” (நற்.172)**

தோழிகளோடு சேர்ந்து விளையாடுகின்ற நிலையில் வெள்ளிய மணலில் புன்னை விதையை அழுத்தி விளையாடிய பின் அதை மறந்தோம். அது முளைத்து முளைவிட்டு நின்றது. அதற்கு நெய்யோடு கலந்த இனிய பாலை நீராக ஊற்றி வளர்த்தோம். இதைப் பார்த்த அன்னை. இப்புன்னை உங்களைவிட சிறப்பானது. உங்களுக்கு தங்கையாகும் தகுதியுள்ளது என்று கூறினாள் என்று தோழி தலைவனிடம் கூறுகின்றான்.

புன்னை மரத்தடியில் பகற்குறியில் சந்தித்த தலைவனிடம் இம்மரத்தைவிட வேறு இடங்களும் உள்ளன. இப்புன்னைமரம் எங்களுடைய தங்கை, அதனால் இங்கே சந்திப்பது எங்களுக்கு நாணமாக இருக்கின்றது என்பதைக் கூறித் தோழி தலைவனுக்கு பகற்குறி மறுக்கின்றாள். புன்னை மரத்தைத் தங்கையாக நினைத்த செயல் இங்குக் குறிப்பிடத்தக்கது. இயற்கையை உறவு முறை வைத்து அழைத்த தமிழர்களின் வாழ்வியலின் சிறப்பிற்கு, மனிதநேயத்திற்கு இப்பாடல் சிறந்த உதாரணம்.

சாகுந்தலத்தில் தன் கணவர் இல்லம் செல்லும் சகுந்தலை தான் வளர்ந்த இடத்தில் உள்ள இயற்கையோடு பேசி விடைபெறுகின்றாள்.

**“என்னுடைய உடன்பிறப்பாய் என்னோ டேயே**
**எழில் கொழிக்க வளர்ந்திட்ட கான்நிலாவாம்**
**அன்புடைய மல்லிகையின் கொடியைக் கண்டே**
**அதனோடே பேசிவிட்டு வரட்டு மாப்ப!..**
**கண்ணுவர்,**
**அன்புடைய என்மகளே உடன்பிறப்பாம்**
**அரும்பண்பை அதனிடம் நீ போற்றி வாழும்**
**அன்புடமை தனை அறிவேன்! தெற்குப் பக்கம்**
**அக்கொடி தான் இருக்கிறது விடைகேள் அம்மா!**

சகுந்தலை,
அக்கொடியின் கிட்டே போய் அன்பு கொண்ட
அருமல்லி ஒருரைகயால் ஓங்கி நின்றே
மிக்கெழிலைப் புரிகின்ற மாமரத்தை
மெல்ல மெல்லத் தழுவியதை அணைத்துக் கொள்வாய்
பக்கத்தில் மற்றோர்கை தன்னால் என்னைப்
பாசமுடன் தழுவிடு நீ! இன்னாள் தொட்டுப்
புக்ககத்தைத் தேடியதன் பின்னால் நானும்
புறப்பட்டு போவதனால் தழுவிக் கொள் நீ!” (சாகு. 4-89)

என்று சகுந்தலை குறிப்பிடுகின்றாள். நற்றிணையில் புன்னை மரத்தை உடன்பிறந்த தங்கையாக நினைத்த மனிதநேயச் சிந்தனை சாகுந்தலத்தில், சகுந்தலை மல்லிக் கொடியைத் தன்னுடன் பிறப்பாகவும் பெற்றெடுத்த குழந்தையாகவும் கூறுகின்றாள். சங்கப் புலவர்கள் இயற்கையை மனிதநேயத்தோடு பார்த்த பார்வை, காளிதாசரின் படைப்புகளிலும் காணப்படுகின்றது. நற்றிணையில் தங்கையாகப் பார்க்கப்பட்ட பார்வை ஒரு படி மேலே சென்று பெற்ற குழந்தையாகவும் காளிதாசரைப் பார்க்கச் செய்வது அவர் இயற்கைமீது கொண்ட எல்லையற்ற காதலை இயம்புவதாக உள்ளது.

**கடித உத்தி**

கோவலனைப் பிரிந்த மாதவி தனிமையில் யாழ் மீட்டுகின்றாள். அந்நிலையில் கோவலன் நினைவில் மயங்கி விழுகின்றாள். பின் மயக்கம் தெளிந்து கோவலனுக்கு கடிதம் எழுதுகின்றாள். அந்தக் கடிதத்தை தோழி வசந்த மாலை மூலம் கோவலனிடம் கொடுக்குமாறு அனுப்புகின்றாள்.

“சண்பகம் மாதவி தமாலம் கருமுகை
வெண்பூ மல்லிகை வேரொடு மிடைந்த
அம்செங்கழு நீர் ஆய் இதழ் கத்திகை
எதிர்பூஞ் செவ்வி இடைநிலத்து, யாத்த
முதிர் பூந்தாழை முடங்கல் வெண் தோட்டு
விரைமலர் வாளியின் வியன்நிலம் ஆண்ட
ஒருதனிச் செங்கோல் ஒருமகன் ஆணையின்
ஒருமுகம் அன்றி உலகுதொழுது இறைஞ்சும்
திருமுகம் போக்கும் செவ்வியன் ஆகி
அலத்தகக் கொழுஞ்சேறு அளைஇ அயலது
பித்திகைக் கொழுமுகை ஆணிகைக் கொண்டு
மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுது இடப்படுப்பினும்
தணந்த மாக்கள் தன்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூது அன்று அ∴து அறிந்து ஈமின்” (பு.வே.கா.45-63)

மாதவி, செண்பகம், மாதவி, பச்சிலை, மரிக்கொழுந்து, இருவாச்சி, மல்லிகை, வெட்டிவேர் ஆகிய பூக்களோடு செங்கழுநீர்ப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையின் இடையே தாழை மாலையின் வளைந்த மடலில் சிறு செண்பகப் பூவின் அரும்பினைக் கொண்டு செம்பஞ்சக் குழம்பில் தோய்த்து ஒரு கடிதம் எழுதினாள். உலகத்தில் உள்ள உயிர்களுக்கு இன்பமளிக்கும் இளவேனிற் காலம் தொடங்கிவிட்டது. இது சந்திரனைப் போன்றது அல்ல, கூடியிருந்தவர் பிரிந்திருந்தாலும். பிரிந்தவர்கள் கூடி இருந்தவரை மறந்தாலும், மன்மதன் மலர் அம்புகளை எய்து அவர்களுக்குக் கூற்றுவன் ஆகிவிடுவான் என்பதை அறிவீராக என்று மாதவி தன் ஆற்றாமையை உணர்த்தி கோவலனுக்கு கடிதம் எழுதுகின்றாள்.

இதைப் போன்றே சகுந்தலை, துஷ்யந்தனுக்கு காதல் கடிதம் எழுத விழைகின்றாள். அவள் எண்ணியதை எழுதுவதற்குத் தகுந்த பொருள் இல்லையே என்று வருந்துகின்றாள். அந்நிலையில் பிரியம் வதை, பச்சைக் கிளியின் வண்ணம் போல பசுமையாகக் குளத்தில் வடட்வடிவமாகக் கிடக்கும் தாமரை இலையில் காந்தள் மலரின் புற இதழ்கள் போல தோன்றுகின்ற எழில் நகத்தினை கொண்டு கடிதம் எழுதலாம் என்று கூறுகின்றாள். அதை ஏற்று சகுந்தலை கடிதம் எழுதுகின்றாள்.

**“இரக்கம் ஒளிரா இளவரசரே**
**இரக்கம் வேண்டித் தவிக்கின்றேன்**
**உறக்கம் கொள்ளா எழிற்காமன்**
**உள்ளும் புறமும் எரிக்கின்றான்**
**ஐந்து பூவால் ஐம்புலனை**
**அனலாய்க் காய்த்தே வதைக்கின்றான்**
**உய்த்தேன் இல்லேன் இராப்பகலாய்**
**உனக்காய் என்னைச் சிதைக்கின்றான்**
**உன்றன் உளத்தை யானறியேன்**
**உடலும் உயிரும் உள்ளுணர்வும்**
**உன்னை நாடித் துடிப்பதனால்**
**உனக்காய் என்னைக் காய்கின்றான்**
**பகலில் கதிரால் சுடுகின்றான்**
**பகல்தான் போனால் நள்ளிரவில்**
**திகழும் குளிர்ந்த நிலாக்கதிரைத்**
**தீயாய் மாற்றிச் சுடுகின்றான்!**
**என்றான் காதல் இளங்கொடி தான்**
**எழிலார் நின்டறன் மனக்கொம்பைப்**
**பின்னிப் பின்னி உயிர்தொளிர்க்கப்**
**பிணைந்து தழுவத் துடிக்கிறதே!**
**பொங்கும் காதல் புயலாலே பொழுதெல்லாமும் அலைகிறதே**
**எங்கே உளதாம் உன் உளமே**
**என்னைத் தாங்கும் கொழுகொம்பே!”** (சாகு 3.55)

என்று சகுந்தலை தன் காதல் உணர்வைக் கடிதத்தில் எழுதித் தோழியிடம் படித்துக் காட்டுகின்றாள். மாதவி பலவிதை மலர்களால் ஆன மாலையின் இடையே தாழை மலரின்

மடலின் செண்பகப்பூவின் அரும்பினைக்கொண்டு செம்மஞ்சக் குழம்பு தேய்த்து கடிதம் எழுதுகின்றாள், என்றால் அவளின் காதலின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ! என்று கூறும் அளவிற்கு இளங்கோவடிகள் மாதவியின் காதலை கடித உத்தி மூலம் வெளிப்படுத்துகின்றார்.

காட்டில் முனிவர்களின் குடிலில் வசிக்கின்ற பெண்ணிற்குக் காதல் ஏற்பட்டால் எவ்வாறு காதல் கடிதம் எழுதுவாள் என்பதைக் குளத்தில் உள்ள தாமரை இலையின் மேல் செங்காந்தள் போன்று உள்ள நகத்தினைக்கொண்டு சகுந்தலை கடிதம் எழுதினாள் என்று காளிதாசர் குறிப்பிடுகின்றார். இளங்கோவடிகளின் கடிதம் காதல் ரசம் சொட்டுகின்ற நிலை, காளிதாசரின் கடிதம் மனவுணர்வுகளை வெளிப்படுத்தத் துடிக்கின்ற நிலை இருவரும் காதல் கடிதம் எழுதுவதில் உணர்வினைப் புகுத்தியிருப்பது சிறப்பு,

**நம்பிக்கை - கண் துடித்தல்**

மனிதன் ஒரு செயலை செய்யும் முன் அச்செயல்மீது அச்சம் கொள்கிறான். அதனால் அவநம்பிக்கை ஏற்படுகின்றது. அந்த அச்சத்திலிருந்து பயத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்குப் பிறவற்றின் மீது நம்பிக்கை கொள்கிறான்.

“நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுன. அவை வழக்கில் மிகுதியாயும் இலக்கியங்களில் குறைந்தும் காணப்படும். எனவே இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள் அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள் அனைத்தையும் கூறும் என்று சொல்ல இயலாது. இலக்கியங்களில் இடம் பெறும் நம்பிக்கைகள் பெரும்பாலும் அன்றைய மக்களிடையே சமுதாயச் செல்வாக்குப் பெற்ற குறிப்பிட்தக்க நம்பிக்கைகளாக அமையும். ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக்கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத் திறனை அளவிட முடியும். சிந்தனைத் திறன் மிக்க சமுதாயத்தில் நம்பிக்கைகள் குறைவாகவும் சிந்தனைத் திறன் குறைந்த சமுதாயத்தில் மூட நம்பிக்கைகள் மிகுதியாகவும் காணப்படும். இதனை நமது நகர், கிராமப்புற மக்களின் வாழ்வியலைக்கொண்டு உணரலாம். “(2008.105) என்று க. காந்தி கூறுகின்றார்

தலைவன் வரைவு வேண்டுகின்ற நிலையில் தலைவியின் உறவுகள் அதை மறுக்கின்றனர். இதனால் ஆற்றதாலாகிய தலைமகளுக்கு, தோழி தனக்கு நற்குறி தோன்றியது. தலைவன் விரைந்து வந்து மணந்து கொள்வான் என்ற நிலையில் கண் துடித்தல் நற்குறியாகக் கூறப்படுகிறது.

**“நுண் ஏர் புருவுத்த கண்ணும் ஆடும்**
**மயிர் வார் முன்கை வளையும் செறூஉம்**
**களிறு கோட் பிழைத்த கதம் சிறந்து எழு புலி**
**எழுதரு மழையின் குழுமும்**
**பெருங்கல் நாடன் வரும் கொல்? அன்னாய்!” (ஐ.நூ.218)**

தலைவன், தலைவியை விரைந்து வந்து மணந்து கொள்வான், எனது இடது கண் துடிக்கின்றது என்று தலைவியை தோழி ஆற்றுவிக்கின்றாள். இதில் கண் என்பது இடது கண்ணைக் குறிப்பதாகவும் பெண்களுக்கு இடது கண் துடித்தல் நன்னித்தமாகவும், ஆண்களுக்கு வலது கண் துடித்தல் நன்னிமித்தமாகவும் சங்க கால மக்கள் நம்பிக்கை வைத்ததை அறிய முடிகின்றது. துஷ்யந்தன், சாகுந்தலையைக் காண்பதற்கு முனிவர்களின் குடிலுக்குச் செல்கின்றான்.

**"துறவோர்கள் வாழ்கின்ற அமைதிப் பூங்கா**
**துறக்கநெறிச் சுரங்கமிது! நல்லவாய்ப்பு**
**நெறியறியும் வலக்கண்கள் துடிப்ப தேனோ?**
**நீண்டுயர் என் வலத்தோளும் துடிப்ப தேனோ?**
**ஆறத்திருப்பாற் கடல்கடைந்தோன் பெற்றாற் போலே**
**அமுதமுடன் திருச் செல்வம் பெறுவே னேநான்**
**திறந்திலரே குடில்கதவு மூடப்பட்டுச்**
**சிறுதாளும் உள்ளுக்குள் உள்ள தேயே?" (சாகு.1-38)**

என்று வலது கண்ணும், வலது தோளும் துடிப்பதாகக் கூறுவது துஷ்யந்தனின் காதல் நிறைவேறப்போவதாக நம்பிக்கை ஏற்படுவதை காளிதாசர் குறிப்பிடுகின்றார். பெண்களுக்கு இடது கண்ணும் ஆண்களுக்கு வலது கண்ணும் துடித்தால் நல்நிமித்தமாகக் கருதிய செயல் சங்க இலக்கியத்திலும், சாகுந்தலத்திலும் கூறுவது நம்பிக்கையின் அடிப்படையில் இரண்டு இலக்கியங்களுக்கும் இடையே ஒற்றுமை நிலவியதை அறியமுடிகின்றது.

**தூது**

சங்க இலக்கியத்தில் தூது பற்றிய பாடல்கள் முழுமையாக இல்லையென்றாலும் அதற்கான அடித்தளம் காணப்படுகிறது. தலைவி, தலைவனுக்குத் தூதுவிடுவதாகச் சில பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. நற்றிணையில் தலைவன் செலவுக் குறிப்பை அறிந்து உடல் வேறுபட்ட தலைவிக்குத் தோழி,

**"நிலம் நீர் ஆர, குன்றம் குழைப்ப,**
**அகல் வாய்ப் பைஞ் சுகைப் பயிர் கால்யாப்ப,**
**குறவர் கொன்ற குறைக் கொடி நறைப் பவர்**
**நறுங் காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப,**
**பெரும் பெயல் பொழிந்த தொழில் எழிலி**
**தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்,**
**அரிதே, காதலர்ப் பிரிதல் - இன்று செல்**
**இளையர்த் தரூஉம் வாடையொடு**
**மயங்கு இதழ் மழைக் கண் பயந்த தூதே" (நற்.5)**

மேகம் பெரும் மழை பொழிந்து இயற்கையைச் செழிக்கச் செய்து தென் திசைக் கண் எழுந்து செல்வதால் பிரிந்தவர்கள் வருந்துகின்ற முன்பனிக் காலத்திலும் காதலரைப் பிரிந்து வாழ்தல் அரிய செயலாகும். இந்த வாடைக் காற்றானது பிரிந்தவர்களைக் கூட்டுவிப்பதாகும். இந்நிலையில் உன் கண்ணீர் தலைவன் பிரிந்து செல்லாதவாறு குறிப்பை உணர்த்தும் தூதை அனுப்பி வைத்தன. அதனால் தலைவன் பிரிந்து செல்லமாட்டான் என்று தோழி, தலைவியிடம் கூறுகின்றநிலையில் தூது என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதை அறியமுடிகின்றது.

தலைவி, தலைவனின் பிரிவாற்றாமையால் கேட்காதவற்றை, கேட்பவைப் போன்று நினைத்து தன் துன்ப நிலையைத் தலைவனிடம் கூறுமாறு வண்டை தூதனுப்புகின்றாள்.

**"கானலும் கழறாது கழியும் கூறாது**
**தேன் இமிர் நறு மலர்ப் புன்னையும் மொழியாது**
**ஒரு நின் அல்லது பிறிது யாதும் இலனே**

**இருங் கழி மலர்ந்த கண் போல் நெய்தல்**
**கமழ் இதழ் நாற்றம் அமிழ்து என நசைஇ**
**தண் தாது நாற்றம் அமிழ்து என நசைஇ**
**பறைஇ தளரும் துறைவனை, நீயே,**
**சொல்லல் வேண்டுமால் அலவ! புல்கால**
**கைதைஅம் படுசினை எவ்வமொடு அசாஅம்**
**கடற் சிறு காக்கை காமா; பெடையொடு**
**கொட்டுமீன் வழங்கும் வேட்டம் மடி பரப்பின்**
**வேள் இறாக் கனவும் நள்ளென் யாமத்து**
**நின் உறு விழுமம் களைந்தோள்**
**தன் உறு விழுமம் நீந்துமோ!" (அகம்.170)**

இருள் செறிந்த நடுயிரவு நேரத்திலும் வந்து, பலநாளும் உன்னுடைய மிக்க துன்பத்தை நீக்கினாள். ஊன் பிரிவால் தான் அடைந்த துன்பக் கடனைக் கடக்க முடியுமோ என்று தன் தலைவனிடம் சென்று என் துன்பத்தைக் கூறுவாயாக என்று தலைவி, வண்டை, தலைவனிடம் தூதாக அனுப்புகின்றாள்.

மேகதூதுவிலும், குபேரனின் சாபம் பெற்ற இயக்கன் தன் மனைவியைப் பிரிந்து சித்திரகூட மலையில் தனிமையில் இருக்கின்றான். இந்நிலையில் இயக்கன் தன் மனைவிக்கு மேகத்தைத் தூதாக அனுப்புகின்றான்.

"மேகமே! நீ போக வேண்டிய இடம் சொல்லுகின்றேன். கேள்! நீ தண்ணீர் வழங்கி உயிர் வாழ வைப்பாய். ஆதலின் என்னையும் என் மனைவியையும் உயிர் காக்க வல்லாய். பிரிவுத் துன்பத்தால் வருந்தும் மாதர்களைக் காக்க வல்லவன் நீ. குபேரன் சினத்தால் என்னைப் பிரிந்திருக்கும் என் மனைவிக்குச் செய்தி தாங்கிச் செல்க. குபேரனது வெளிப் பூங்காவில் சிவபெருமான் எப்போதும் கோயில் கொண்டுள்ளான். அவன் திருமுடியிலுள்ள திங்களின் ஒளியால் நனையப்பெற்ற மாளிகைகள் பொருந்திய அளகாபுரியே நீ போக வேண்டிய இடம். தூதுவனான நீ புறப்பட்டதும் நலிவுற்ற மாதருக்குத் துணைபுரிந்து மேலும் மகிழ்ச்சியுறுவாய். வழி நெடுக உனக்கு நல்ல வரவேற்பு இருக்கும். இளங்காற்று உன்னை இழுத்துச் செல்லும். வானம்பாடி இனிமையாகப் பாடிக்கொண்டு வரும். பெட்டைக் கொக்கு வரிசைகள் உனதருகே பறந்து வரும். சகுன நூல்படி இவையாவும் நல்லனவாம். (நராயண வேலுப்பிள்ளை. 2009.74) என்று இயக்கன் தன் மனைவிக்குத் தூதுவிடுகின்றான். சங்க இலக்கியத்தில் தலைவி கேட்காதவற்றை கேட்பவையாக நினைத்துக்கொண்டு வண்டை தூது விடுவது போன்று இயக்கனும் மேகத்தைத் தூதுவிடுகின்றான். இதிலிருந்து சங்க இலக்கியத்தின் தாக்கம் மேக தூதத்தில் காணப்படுவதை அறியலாம்.

சங்க இலக்கிய புலவர்கள் மக்களின் வாழ்க்கையை இயற்கையோடு இயைந்து கட்டமைத்திருக்கின்றனர். இயற்கையில் கிடைக்கும் பொருள்களை வர்ணிக்கும் நிலையிலும் உவமை, உள்ளுறைகளைப் பயன்படுத்துகின்றவிதத்திலும் சங்கப் புலவர்களின் கவி ஆளுமைத் திறனை அறிந்து கொள்ளமுடியும். காளிதாசரின் படைப்புகளிலும் இயற்கையைச் சிறப்பாக வர்ணிக்கும் திறன் காணப்படுகின்றன. சங்கப் புலவர்களின் கவி ஆற்றல் காளிதாசனைப் பாதிப்புக்குள்ளாக்கியது என்பதற்கு,

**"காவிரி யாற்றிலே சேனை குளித்ததனால்**
**பூவேறும் வாசம் புகுந்ததே!-மாவேகத்**

**தோடு சமுத்திரத்தின் தோள்அணைத்தா ளாம்மனைவி…!**
**வாடும் கணவன் மனம்! (இ.வ.4.45)**
**தெற்குத் திசைவந்தால் சூர்யன் ஒளிகூடச்**
**சற்றே குறைந்துவிடும் பாண்டியரால்!-அற்புதப்**
**பாண்டிய மன்னர் ரகுவின் பராக்கிரமம்**
**தாண்டவில்லை, வீழ்ந்தார் தவித்து! (இ.வ.4.46)**
**மிளகுக் கொடிசூழ் மலய மலையில்**
**களைப்பாறச் சாயுமே சேனை!-தலைசாய்த்துப்**
**பார்த்தபடி யேபறக்கும்! பச்சைக் கிளிஎல்லாம்**
**வேர்த்தபடி யேபறக்கும்!” (இ.வ.4.49)**

என்பதை அறியலாம். இதிலிருந்து காளிதாசர் தமிழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றவர் என்பது தெளிவாகின்றது. ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்படுகின்ற பெண்களின் அழகை வர்ணிக்கின்ற நிலையில் விறலியின் பார்வை மானின் பார்வை போன்றிருந்தது என்று கூறுவதைப் போன்றே பார்வதி தேவியின் பார்வையும் மருண்ட மானின் பார்வைப் போன்றிருந்தது என்று காளிதாசர், குமாரசம்பவத்தில் குறிப்பிடுகின்றார். பாடினியின் சிவந்த பாதங்கள் பாலை நிலத்தில் நடக்கும்போது துன்பத்தை அனுபவித்தன என்பது போன்று குமாரசம்பவத்தில் கின்னர ஸ்த்ரீகளின் பாதங்களும் உறைந்த பனிப்பாறைகளில் நடக்கும்போது துன்புற்றன என்று கூறப்படுகின்றது. நற்றிணையில் தோழி புன்னை மரத்தை தன் தங்கையாகக் குறிப்பிடுவது போன்று சாகுந்தலத்தில், சகுந்தலை, மல்லிகைக் கொடியைத் தன் உடன் பிறப்பாகவும், பெற்ற குழந்தையாகவும் பார்க்கின்றாள். மாதவி, கோவலனுக்குத் தன் காதலை வெளிப்படுத்துவதற்குப் பலவித மலர்களாலும் செம்பஞ்சுக் குழம்பாலும் கடிதம் எழுதுவது போன்று சகுந்தலையும் துஷ்யந்தனுக்குத் தாமரை இலையில் செங்காந்தள் போன்ற தன் நகத்தால் கடிதம் எழுதினாள் என்று கூறுவது இளங்கோவடிகள், காளிதாசரின் கற்பனை ஆற்றலின் ஒற்றுமைத்தன்மையை அறியமுடிகின்றது.

ஐங்குறுநூற்றுத் தோழி, தன் இடது கண் துடிப்பது தலைவன் வரவைக் குறிப்பதாகும் என்ற நற்செய்தியைத் தலைவியிடம் கூறுகின்றாள். அதுபோல துஷ்யந்தனுக்கும் வலது கண்ணும் வலது தோளும் துடிப்பது அவன் காதல் நிறைவேறப்போகின்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. நம்பிக்கையின் அடிப்படையில் இரு இலக்கிங்களுக்கிடையில் ஒற்றுமைக் கூறுகள் நிலவியதை அறியமுடிகின்றது. சங்க இலக்கியத்தில் தூதுக்கான கூறுகள் பல இடங்களில் காணப்படுகின்றன. அகநானூற்றுத் தலைவி, தலைவனிடம் வண்டை தூது விடுவதைப் போன்று இயக்கனும், தன் மனைவிக்கு மேகத்தைத் தூது விடுவதாக மேகதூதும் காணப்படுகின்றது. ரகுவம்சத்தில் காவிரியின் சிறப்பு, கேரளாவின் அழகு, பாண்டிய நாட்டின் நிலை போன்றவற்றைக் காளிதாசர் பதிவு செய்கின்றார். இதிலிருந்து தமிழ்ச் செவ்விலக்கியக் கூறுகள் காளிதாசரின் படைப்புகளில் காணப்படுவதை அறியமுடிகின்றது.